

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்நேற்று (28.11.2024) உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்று வரும் சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் உடல்நிலை குறித்து மருத்துவமனைக்கு நேரில் சென்று மருத்துவர்கள் மற்றும் குடும்பத்தினர்களிடம் கேட்டறிந்தார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் கு. செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் கோபண்ணா ஆகியோர் உள்ளனர்.

### கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 5 தொகுதிகளிலுமுள்ள

# மாற்றுத்திறனாளிகள் 64 பேருக்கு 3 சக்கர வாகனங்கள்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில்
### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!





கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கடலூர் அண்ணா நகர் ஜி.கே.பள்ளி வளாகத்தில் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகள் 64 பேருக்கு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மூன்று சக்கர மோட்டார் வாகனங்களை வழங்கினார். உடன் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் – மேற்கு மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன், கடலூர் கிழக்கு மாவட்டப் பொருளாளர் எம்.ஆர்.கே. கல்வி குழுமத்தின் தலைவர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கழகத் தேர்தல் பணிச் செயலாளர் இள.புகழேந்தி, கடலூர் மாநகர மேயர் சுந்தரி ராஜா, கடலூர் மாநகரச் செயலாளர் கே.எஸ்.ராஜா மற்றும் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், கழக முன்னோடிகள், கழக சார்பணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 7, 8 – இல் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி 1.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 1.12.2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 7 | பாபநாசம் | ஸ்ரீ துர்கா மஹால், புதிய பேருந்து நிலையம் எதிரில், பாபநாசம், தஞ்சாவூர். |
| | மாலை 4.00 மணி | | விராலிமலை | எம்.கே.எஸ். திருமண மண்டபம், மேட்டுச்சாலை, இலுப்பூர் புதுக்கோட்டை. |
| | காலை 9.00 மணி | 8 | சங்கரன்கோவில் | கோகுலம் மஹால், ரத வீதி, சங்கரன்கோவில். |
| | மாலை 4.00 மணி | | ஆலங்குளம் | ஏ.ஜெ. மஹால், மலைக்கோயில் வளைவு எதிர்ப்புறம், தென்காசி பிரதான சாலை, ஆலங்குளம், தென்காசி. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல் இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 28-11-2024

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி





கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழக துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்ட திமுக சார்பில், அண்ணாசாலையில் அமைந்துள்ள சிறுவர் மழைலையர் (LITTLE FLOW ER) பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அறுசுவை உணவுகள் வழங்கினர். இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர்கள் மா.பா. அன்புதுரை, வினோத் வேலாயுதம், மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ். கலை, சங்கீதா, அகஸ்டீன் பாபு, மாவட்ட அமைப்பாளர்கள் துபாய் வி.ஆர். விஜய், ச.அசோக்குமார், திருமலை பொண்ணுரங்கம், டி.எஸ்.ராஜா மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இம்ரான் ஆரூன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### சென்னை கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி சார்பில்

# 21 இணையர்களுக்கு சீர் வரிசையுடன் கூடிய திருமணம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் - பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நடத்தி வைத்தார்!

*சென்னை, நவ. 29-*

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்-2, இணைகிறது இரு இதயம்! மலர்கிறது புது உதயம்! எனும் தலைப்பில் திருமண விழா 28.11.2024, புதன் கிழமை அன்று காலை 8 மணியளவில், சென்னை, பாரிமுனை, ராஜா அண்ணாமலைமன்றத்தில் நடைபெற்றது.

இத்திருமண விழா சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை யில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பா. ஜெகதீஷ் தலைமையில், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், எம்.விஜயகுமார், ப.ஸ்ரீராமுலு, ஜி. எம்.தேவன், இசட்.ஆசாத் எம்.சி,, என்.பி.எம்.சேக் அப்துல்லா, எம்.இப்ராஹிம் கனி, இரா.கலைச்செல்வி, பா.ஜெகதீஷ், எல்.சம்பத்குமார், பி.விஜயகுமார், பா.பிரதீப்குமார், எம்.வினாயகம், வெ.பரிமளம் எம்.சி, ராஜேஷ்ஜெயின் எம்.சி, எல்.





நவின் எம்.சி ஆகியோர் வரவேற்புரை ஆற்றிய திருமண விழாவில்,

21 இணையர்களுக்கு சீர் வரிசையுடன் கூடிய திருமணத்தை - மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, அவர்களும், மாநில கழக இளைஞரணி துணைச்செயலாளர் எஸ்.ஜோயல் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்து சிறப்புரை ஆற்றினர்.

மேலும் இத்திருமண விழாவில் மேயர் பிரியா ராஜன், இரா.நரேந்திரன், கே.சந்துரு, பி.கே.மூர்த்தி, கே.எஸ்.எம்.நாதன், தமிழன் பிரசன்னா, சங்கரி நாரராயணன், எஸ்.மணி முடி, வே.உமாகாந்த் பரிதி இளம்சுருதி, கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன், கூ.பீ.ஜெயின், சரிதா மகேஷ்குமார், சொ.வேலு எம்.சி., டாக்டர்.ஜி.சாந்தகுமாரி. பகுதி கழக செயலாளர்கள்: ஐசிஎப்.வ. முரளிதரன், இ.நாகராசன், டி.எஸ். பி.ராஜகோபால், எம். டி.ஆர்.நாகராஜ், வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு. வி.சுதாகர், ஜெ.பாலமுருகன், க. வினோத், ஜி.ஜே.பிரபு, எஸ். தனசேகர், சுதாதீனதயாளன், ராஜேஷ்வரிஸ்ரீதர், எம். பெரோஸ்கான், ஜி.வி.நாகவள்ளி, மா.அசோக்குமார், கா.ராஜ்முகமது, மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, மா. முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ. தமிழ்வாணன், வி.சந்தான லட்சமி, சி.ப.ஜெயராமன், துறைமுகம் மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: மா. ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், பா.கதிரவன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை. துறைமுகம் கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: த.கதிரவன்(எ) ராஜா, எம்.பரத்குமார், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் டி.சதீஷ்குமார், வே. பா.பிரபாகரன் ஆகியோர் நன்றி கூறினர்.

### பி.மணிவண்ணன் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் மதுரை சாதுராஜா - கே.வி.விஜயன் பங்கேற்பு!

# மதுரவாயல் 91வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

### டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

*சென்னை, நவ.29-*

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி 91 வது வட்ட தி.முக. இளைஞர் அணி சார்பில் துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு தெருமுனைக் கூட்டம் இன்று (29.11.2024-வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு முகப்பேர் மேற்கு ஏரித்திட்டம், எஸ்.பி.ஐ.ஓ.ஏ. பள்ளி எதிரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு 91 வது வட்ட இளைஞர்அணி அமைப்பாளர் அப்பு என்கிற பி.மணிவண்ணன் தலைமை வகிக்கிறார், வடக்கு பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கிறார்.

91 வது வட்டச் செயலாளர் எம்.கே.பி. அண்ணாதாசன், ஆ.மாலினி எம்.சி. ஆர். ரசூல்தீன், ஆர்.ராக்கேஷ், டி.தாமோதரன், பி.ராஜேந்திரன், எம்.செல்வகுமார், எஸ்.கெஜலட்சுமி, ஏ.அப்பாசாமி, எம்.கோபி, ஆர்.ஆனந்ததோஜி, ஜெ.சௌரி, எம்.கே.பி. ஜெயசீலன், வி.செல்வக்குமார், ஆர்.அமுதாராமச்சந்திரன், டி.கன்னியப்பன் ஜெஸ்வந்த் நகர் எம்.டில்லி ராஜா, தயாநிதிபிரபு, எஸ். ஜானகி, ஜி.வசந்தி, கோ.மணி, கே.கே.முனீஷ்வரன், கே.சண்முகம், பி. சுரேஷ், எஸ்.சண்முகம், பி.முத்துக்குமார், என்.வடிவேல், ஏ.கார்த்திக், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் மதுரை சாதுராஜா, கே. வி.விஜயன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக் கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்து உரை நிகழ்த்துகின்றனர்.

மேலும் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, எம்.எல்.ஏ., மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் பி.டி.பாண்டிச்செல்வம், அ.ம.துரைவீரமணி, கே.குமரேசன், முகப்பேர் கே.நீலகண்டன், எம்.கே.பி.உதயசூரியன், ஆர்.கர்ணல், எம்.ஏ.செந்தில்சுரேஷ், தீ.பாலாஜி, எம்.உதயகுமார், எஸ்.ஜி.மாதவன், ப.ஆலன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், எம். ரூபன், எம்.இ.ஸ்டாலின் , ரமணி மாதவன், எம். கே.ஞானசேகரன், எம். சி.எழில்அரசு, பி.சங்கர், க.பிருந்தாவணன், கே.ராஜ்குமார், கோ.முரளி, எம். ஆர்.சதீஷ், சி.டி.ரமேஷ், ஜி.குப்புசாமி, மீசை என். செல்வராஜ், கே.விவேக்குமார், எம்.கே. அரிதாஸ்., வழக்கறிஞர்விஷ்னு, டாக்டர் எம்.சி.அழகிரி, ஏ.ஜி. வேலன், ஏ.வேலு, வசந்த் வாசுதேவன், எம்.எஸ். பிரபு, தினகரன் சண்முகம், ஜி.மூர்த்தி, பி.கோபிநாத், பா.வாசுதேவன், எம்.சங்கர், பி.வி.சௌந்தர், கு.கோவிந்தராஜ், பி.ஜெயபிரகாஷ், ஜெ.பி.ஜெயபிரகாஷ், டி.சுபாஷ், என்.மணிவண்ணன், சுந்தர் ஆதிகேசன், கு.ராஜா, மின்னிஜான், ஏ.எஸ்.டி.கமலி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பி.தயாநிதி பிரபு, வி. யோகேஷ்வரன், கொரியர் விவேகானந்தன், எம்.விக்னேஷ்வரன், எஸ்.மணிகண்டன், வி.கௌசிக் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.